




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (SIPCOT) 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 75 கோடியே 81 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், “சிப்காட்” நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில் ராஜ் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (TNPL) 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 12 கோடியே 22 இலட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.சாய் குமார், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அயலக தொடர்பு குழு தலைவர் பெ. இராஜேந்திரன் எழுதிய ”மந்திரக் கணங்கள் நூலினை வெளியிட, தமிழறிஞர்கள் பெற்றுக் கொண்டனர். முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இவ்வேளையில் 2004 ஆம் ஆண்டு அயலக எழுத்தாளர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்புடன் வரவேற்று அங்கீகாரத்தை கொடுத்த தருணங்களையும், மலேசிய மக்களுக்கு செய்துள்ள மகத்தான தமிழ்ப் பணிகள் குறித்தும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி மற்றும் டி.கே.எஸ். இளங்கோவன், மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று (2.11.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் (ம) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் சென்னை தீவுத்திடல் மைதானத்தில் ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்டின் இந்திய பந்தய விழாவை நடத்துவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.15 கோடி நிதியை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.